DEPOSITION OF WITNESSES

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.2 SRIVAIKUNDAM

| | |
|---|---|
| Case No | CC. 200/ 2023 |
| Depostition of witness for | Prosecution wit. PW. 1 |
| Name | திரு. ராஜேந்திரன் |
| Father Name | முருகையா |
| Village | மாறமங்களம் |
| Taluk | |
| caste | |
| calling | |
| Religion | |
| Age | 60 |

**<u>( எதிரி ஆஜரில்லை: எதிரிதரப்பில் கு.வி.மு.ச பிரிவு 317(2)ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பில் வழக்கறிஞர்கள் ஆஜர்) )</u>**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 the 08-06-2026.(நேரம்: 12.25PM )**

**<u>முதல்விசாரணை</u>**

1.நான் தற்போது மாறமங்களத்தில் குடியிருந்து வருகிறேன்.

2, நான் ஆட்டோ டிரைவராக வேலைசெய்து வருகிறேன்.

3. சாட்சிகள் எட்வின் சுந்தரராஜை தெரியும். சாட்சி ஞானசேகரனை தெரியும்.

4.இவ்வழக்கின் எதிரி வடிவேலை எனக்கு தெரியும்.

5.கடந்த 25.01.2023 ஆம் தேதி காலை 10.00 மணியளவில் நான் ஆறுமுகமங்களத்தில் உள்ள சுடலை ஈஸ்வர கோவிலில் சாமி கும்பிட்டு விட்டு வெளியே வரும்போது இவ்வழக்கின் எதிரி வடிவேல் சண்டை போட்டு தகராறு செய்தார்.

6.பின்பு என்னை "புண்டா மவனே" என்று கெட்ட வார்த்தையால் ஏசினார்.

7.பின்பு பக்கத்தில் உள்ளவர்கள் சண்டையை விலக்கிவிட்டார்கள்.

8.பின்பு இது சம்மந்தமாக ஏரல் காவல் நிலையத்தில் புகார் செய்தேன்.

9.என்னிடம் காட்டப்படும் புகார் மனு தான் நான் கொடுத்தது. என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள ராஜேந்திரன் என்ற கையொப்பம் என்னுடையது தான்.
10. அதில் என்ன எழுதியிருக்கிறது என்ற விவரம் எனக்கு தெரியும். **அந்த புகார் மனு அசாஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**
11. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் கோவில் ஆறுமுகமங்களத்தில் உள்ள சுடலை கோவில் என்றால் சரிதான்.
2.அந்த கோவிலில் எப்போதும் ஆள்கள் இருக்கும் என்றால் சரிதான்.
3.சம்பவம் நடந்த அன்று 50 பேர் இருந்திருப்பார்களா என்றால் இருந்திருப்பார்கள்.
4.ஆறுமுகமங்களம் கோவிலுக்கு நான் சவாரி அழைத்துக்கொண்டு ஆட்டோவில் சென்றேன் என்றால் சரிதான்.
5. நான் ஆறுமுகமங்களத்திற்கு சம்பவ தேதியன்று சவாரி அழைத்து சென்றது தொடர்பாக யாருக்காவது தெரியுமா என்றால் தெரியாது.
6.நான் சவாரி அழைத்து சென்ற நபருக்கு நடந்த சம்பவம் தெரியுமா என்றால் தெரியாது.
7.நான் சொல்வதுபோல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.
8. எதிரி வழிமறித்து கெட்ட வார்த்தையால் பேசி, கொலை மிரட்டல் விடுத்தாக சொல்வது வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.
9.ஆட்டோ சம்மந்தமாக ஆவணங்களை வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.
10.வழக்கிற்கும் எதிரிக்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றால் சரியில்லை.

சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில்சாட்சி சொல்ல, சொல்ல என்னால் தட்டச்சருக்குசொல்லப்பட்டு, அவரால் கனிணியில் பதிவு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு ஒப்புக்கொண்டு கையெழுத்து பெறப்பட்டது.

ஒ/ம் ராமசங்கரன்
நீதித்துறை நடுவர் எண். 2
ஸ்ரீவைகுண்டம்.

DEPOSITION OF WITNESSES

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.2 SRIVAIKUNDAM

| | |
|---|---|
| Case No | CC. 200/ 2023 |
| Depostition of witness for | Prosecution wit. PW. 2 |
| Name | திரு.எட்வின் சுந்தரராஜ் |
| Father Name | பாக்கியராஜ் |
| Village | ஏரல் |
| Taluk | |
| caste | |
| calling | |
| Religion | |
| Age | 42 |

**( எதிரி ஆஜரில்லை: எதிரிதரப்பில் கு.வி.மு.ச பிரிவு 317(2)ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பில் வழக்கறிஞர்கள் ஆஜர்) )**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 the 08-06-2026.(நேரம்: 12.25PM )**

**முதல்விசாரணை**

1.நான் தற்போது ஏரலில் குடியிருந்து வருகிறேன்.

2, நான் ஆட்டோ டிரைவராக வேலை செய்து வருகிறேன்.

3. அசா 1 ஐ எனக்கு தெரியும்.

4. இவ்வழக்கின் எதிரி வடிவேலை எனக்கு தெரியும்.

5.இவ்வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது.

6. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

(அ.சா 2 சாட்சியானவர் அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியம் அளிப்பதால் அவரை பிறழ் சாட்சியாக பாவிக்க கோரி வாய்மொழி விண்ணப்பம் அரசு தரப்பில் செய்யப்பட்டது. அ.சா 2ன் சாட்சியை பரிசிலனை செய்ததில் அவர் அரசு தரப்புக்கு விரோதமாக சாட்சியம் அளித்ததாக அறிய முடிவதால் அவரை பிறழ் சாட்சியாக இந்த நீதிமன்றம் அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்புக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.)

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 25.01.2023 ஆம் தேதி காலை 10.00 மணிக்கு அசா 1 ஆறுமுகமங்களத்தில் உள்ள கோவிலில் சாமி தரிசனம் செய்துவிட்டு வெளியே வரும்போது இவ்வழக்கின் எதிரி வடிவேல் அசா 1 ஐ வழிமறித்து கெட்ட வார்த்தையால் பேசி , பின்பு கொலை மிரட்டல் விடுத்தார் என்ற சொன்னால் சரியல்ல. மேற்படி சம்பவத்தை நான் நேரில் பார்த்தேன் என்று போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரி பக்கத்து ஊர்காரர் என்பதால் உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில்சாட்சி சொல்ல, சொல்ல என்னால் தட்டச்சருக்குசொல்லப்பட்டு, அவரால் கனிணியில் பதிவு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு ஒப்புக்கொண்டு கையெழுத்து பெறப்பட்டது.

ஒ/ம் ராமசங்கரன்
நீதித்துறை நடுவர் எண். 2
ஸ்ரீவைகுண்டம்.